கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அமர்வு வழக்கு எண்.184/2023

அ.சா.12 (LW 18)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | Dr.அகமது சேக் | **தொழில்** | **மருத்துவர்** |
| **த/க பெயர்** | | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **07.10.2025** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ஆம் எதிரி ஆஜர். 2 ம் எதிரி இறப்பு.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.06.2023 அன்று நான் முறைப்படி அலுவலில் இருந்த போது நகர் மேற்கு காவல் நிலைய ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோளின் படி 25 வயது மதிக்க தாக்க அழகுபாண்டி என்பவரின் பிரேதத்தை சிறப்பு சார்பு ஆய்வாளர் மகாராஜன் அடையாளம் காட்ட பிரேத பரிசோதனை மதியம் 12.10 மணிக்கு ஆரப்பிக்கப்பட்டது. மேற்படி காவல்நிலைய குற்ற எண்.224/2023.

மிதமான உடல் வாகுடைய ஆண் பிரேதம், கழுத்து மற்றும் தலை பகுதியில் ஒன்றுக்கும் மேற்பட்ட வெட்டு காயத்துடன் காணப்பட்டது.

**காயங்கள்**

1. தலையின் பின் பகுதியில் ஒன்றுக்கும் மேற்பட்ட வெட்டுக்காயங்கள் வெவ்வேறு நீள அகலத்துடன் காணப்பட்டது.

2. முகத்தில் முன் பகுதியில் ஒன்றுக்கும் மேற்பட்ட வெட்டுக்காயங்கள் வெவ்வேறு நீள அகலத்துடன் காணப்பட்டது.

3. கழுத்தின் முன் பகுதியில் நடுவில் 16X 5 செமீ முச்சுக்குழலின் ஆழம் வரை வெட்டுக்காயம் காணப்பட்டது. பகுப்பாய்வு செய்து பார்த்ததில் மூச்சுகுழல் அருந்து உள்ளே சிவப்பு நிற நுரை காணப்பட்டது. இக்காயத்தின் பகுதியில் அனைத்து நரப்புகள் மற்றும் ரத்த நாளங்கள் அறுத்து காணப்பட்டது.

4. வலது மார்பின் மேற்பகுதியில் 6 X 4 செமீ நெஞ்சுக்கூட்டின் ஆழம் வரை

வெட்டுக்காயம் காணப்பட்டது. பகுப்பாய்வு செய்து பார்த்ததில் வலது நுரையீரல் சுருங்கி ரத்தக்கட்டுடன் காணப்பட்டது. ஆழமாக பகுப்பாய்வு செய்து பார்த்ததில் வெட்டுக்காயம் வலது நுரையீரலின் மேல் புறத்திங்ல தைத்து காணப்பட்டது.

5. வலது தோள் பட்டையின் மேல் 2 X 1 செமீ எலும்பிம் ஆழம் வரை கிழிந்த காயம் காணப்பட்டது.

6. சிராய்பு காயம் 10 X 1 செமீ இடது முன்கையின் நடுப்புறத்தில் காணப்பட்டது.

இதை தவிர்த்து பிரேததின் மீது எந்த காயமும் காணப்படவில்லை.

மண்டைஓட்டை பகுப்பாய்வு செய்து பார்த்ததில் மண்டை ஓட்டின் தோளுக்கு அடியில் 16 X 6 செமீ தோளின் ஆழம் வரை மண்டையின் பின் பகுதியில் ரத்தகட்டு காயம் காணப்பட்டது. பகுப்பாய்பு செய்து பார்த்ததில் மண்டை ஓட்டின் பின் எலும்பு உடைந்து காணப்பட்டது. ஆழமாக பகுப்பாய்வு செய்து பார்த்ததில் மூளையின் சவ்வு கிழிந்து மூளையை சுற்றி ரத்தக்கட்டுடன் காணப்பட்டது. மண்டை ஓட்டின் பின் பகுதி உடைந்து காணப்பட்டது.

நெஞ்சுக்கூட்டை பகுப்பாய்வு செய்து பார்த்ததில் 650 மிலி திரவ ரத்தம் காணப்பட்டது.

வயிற்று பகுதியை பகுப்பாய்வு செய்து பார்த்ததில் முழுவதும் செரிக்கப்படாத 1000 கிராம் உணவு பொருள் பழ வாசனையுடன் காணப்பட்டது. உடல் உள்ளுறுப்புகள் அனைத்தும் வெளிரி காணப்பட்டது.

உடல் உள்ளுறுப்புகளை ரசாயன பகுப்பாய்விற்க்கு உட்படுத்தியதில் எத்தில் ஆல்கஹால் கண்டறியப்பட்டு மதுரை வட்டார தடயவியல் ஆய்வகத்தில் இருந்து அறிக்கை பெறப்பட்டது. **அந்த அறிக்கை அ.சா.ஆ.10 ஆகும்.** மேற்படி ஆய்வறிக்கையில் விசத்தன்மை கண்டறிப்படவில்லை.

ரத்த வகையை அறியும் பொறுட்டு ரத்த மாதிரி சேகரித்து மதுரை வட்டார தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்பட்டது. அதனை தொடர்ந்து 21.07.2023 அன்று மதுரை வட்டார தடயவியல் ஆய்வகத்தில் இருந்த அறிக்கை பெறப்பட்டதில் இருந்து மேற்படி நபர் வெட்டுக்காயத்தினால் அதிக ரத்த போக்கு ஏற்பட்டு, அதிர்வினால் இறந்திருக்க கூடும் என்று தெரிவிக்கப்பட்டது. அந்த அறிக்கை இது தான் அது **அ.சா.ஆ.11** ஆகும்.

உடற்கூராய்வு இறுதி அறிக்கை **அ.சா.ஆ.12** ஆகும்.

ஆய்வாளர் என்னை விசாரித்தார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

எனது பிரேத பரிசோதனை அறிக்கையில் உடற்கூராய்வு செய்த நேரத்தில்

இருந்து எவ்வளவு நேரத்திற்கு முன்பாக அந்த நபர் இறந்திருக்க கூடும் என்று கருத்து எதுவும் நான் தெரிவிக்க வில்லை என்றால் சரிதான். இறந்தவருக்கு உடலில் மார்புக்கு மேல் தான் காயம் ஏற்பட்டுள்ளது என்றும், மார்புக்கு கிழே உடலில் எந்த பகுதியிலும் சிராப்பு காயங்கள் தவிர வெட்டுக்காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். தலையில் எத்தனை காயங்கள் ஏற்பட்டுள்ளன என்று அதன் அளவுகள் என்ன என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்த நபரின் தலையின் ஓட்டு பகுதி உடைந்திருந்தது என்றால் சரிதான். மேற்படி காயங்கள் விபத்து ஏற்படும் போதோ, கூர்மையான பொருட்களின் மீது விழும் போது ஏற்பட வாய்புண்டு என்றால் விபத்தினால் ஏற்பட வாய்ப்பில்லை, கூர்மையான பொருட்களின் மீது விழும் போது ஏற்பட வாய்ப்புண்டு. இறந்த நபர் மதுஅருந்தியுள்ளார் என்பதை மதுரை தடயவட்டாரவியல் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அங்கு கண்டறிப்பட்ட எத்தில் ஆல்கஹால் என்பது மது வகையை சார்ந்தது என்றால் சரிதான். அந்த எத்தில் ஆல்கஹால் தீப்பிடிக்க கூடியது என்றால் தனியாக தீப்பிடிக்காது ஆக்சிஜனுடன் சேரும் போது தீப்பிடிக்கும். பட்ட சாராயத்தில் எத்தில் ஆல்கஹால் இருக்கும் என்றால் சரியல்ல. மெத்தில் ஆல்கஹால் தான் இருக்கும். மேற்படி எத்தில் ஆல்கஹால் என்பது கிருமி நாசினியாகவும், வாகனகளின் எரி பொருளாகவும் பயன்படுத்துவார்கள் என்றால் தவறு. மேற்படி தடய அறிவியல் ஆய்வறிக்கையில் எவ்வளவு சதவீதம் எத்தில் ஆல்கஹால் உள்ளது என்பதை குறிப்பிட்டு சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார். மேற்படி இறப்பான கூர்மையான ஆயுததின் மீது விழுத்ததால் ஏற்பட்டது என்றும், மேலும் எத்தில் ஆல்கஹால் அதிகமாக உட்கொண்டதால் இறப்பு ஏற்பட்டது என்றும், நான் போலிசார் வேண்டுகோளுக்கிணங்க அதிர்வு மற்றும் ரத்த போக்கினால் இறந்துள்ளார் என்று தவறான அறிக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.10.07 06:20:52 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.